**செய்தி வெளியீடு எண்: 588** **நாள்: 08.10.2012**

**செய்தி வெளியீடு**

ஒளிவு மறைவற்ற, திறமை மிக்க மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை அளிப்பது தான் ஒரு நல்ல அரசின் இலக்கணமாகும். அந்த வகையில், இயற்கைச் சீற்றங்களால் மக்கள் பாதிக்கப்படும் போது, அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் அதே நேரத்தில், நீண்டகால மறுவாழ்வுப் பணிகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு மிகுந்த அக்கறையுடனும், ஈடுபாட்டுடனும் செயல்படுத்தி வருகிறது.

2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வீசிய 'தானே' புயலினால் பலர் தங்களது வீடுகளை இழந்தனர். பயிர்கள் சேதமடைந்து, மக்களின் வாழ்வாதாரத்தையே கேள்விக்குறியாக்கியது. இந்த நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு விரைந்து செயல்பட்டு, குறுகிய காலத்திலேயே பல்வேறு நிவாரண உதவிகளை அளித்து, அவர்களது வாழ்க்கையினை இயல்பு நிலைக்கு கொண்டு வந்தது.

பயிர்களை இழந்த விவசாய பெருமக்களுக்கு பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிவாரண தொகுப்பினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு வழங்கியது. வீடு இழந்த மக்களுக்கென, 1 லட்சம் வீடுகள் கட்ட 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்னெவே ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

'தானே' புயலின் தாக்கத்தில், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. எனவே 'தானே' புயலால் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு புத்துணர்வு கொடுத்து, மீண்டும் செயல்பட வழிவகை செய்யும் வகையில், கடலூர் மாவட்டத்தில் உள்ள 2004 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயன் பெறும் வகையில் 12 கோடியே 92 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் நிதி உதவியும், விழுப்புரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 53 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் புத்துணர்ச்சி பெற்று, மீண்டும் செயல்படுவதற்கு ஏதுவாக 1 கோடியே 32 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் நிதி உதவியும் ஆக மொத்தம் 2,057 சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயன் அடையும் வகையில் 14 கோடியே 25 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், மீண்டும் உற்பத்தி தொடங்கி, தொழில் வளர்ச்சி உருவாகுவதற்கு வழி வகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.

நாள்:- 8.10.2012.